சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.169/2021

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – அழகர் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 05.06.2013 ம் தேதியிட்ட எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு அடமானக் கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.1**. 05.12.2011 ம் தேதியிட்ட பிரதிவாதிக்கு அவரது சகோதரர் எழுதிக்கொடுத்துள்ள இனாம் செட்டில்மெண்ட் அசல் **வா.சா.ஆ 2**. 18.09.2021 ம் தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ 3**. 21.09.2021 ம் தேதியிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ 4**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.